(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 31.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 திசெம்பர் 08, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

45/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கி வந்த அம்பாந்தோட்டை வாடி வீடு தனியார் துறைக்கு உரித்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அங்கு பணியாற்றிய ஊழியர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) இச் செயற்பாடு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிதி சார்ந்ததொரு நட்டம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வாடி வீட்டினை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

133/ '15

2.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்கள் அல்லாத நிறுவனங்களினால் நடத்தப்படும் பொறியியல், கணக்கீடு மற்றும் பிற தொழில்வாண்மை கற்கைநெறிகளின் எண்ணிக்கை நிறுவன ரீதியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ்வரும் பல்கலைக்கழகங்களில் கட்டணம் அறவிட்டு நடத்தப்படும் கற்கை நெறிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கற்கைநெறி மற்றும் கற்கை நெறிக்காக அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை மேற்படி கட்டணங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

164/ '15

3.

கௌரவ லக்கி ஜயவர்தன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கை கடமையில் ஈடுபட்டிருந்த பெருந்தொகையான இலங்கை இராணுவ வீரர்கள் 12 வருடங்கள் இராணுவத்தில் கடமையாற்றிவிட்டு இராணுவ சேவையிலிருந்து நீங்கியுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் இன்றளவில் நிர்க்கதி நிலையில் உள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இராணுவத்தில் 12 வருடங்கள் கடமையாற்றிவிட்டு இராணுவ சேவையிலிருந்து நீங்கியுள்ள வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) நாட்டுக்காக உயிர் தியாகத்துடன் செயலாற்றிய இவர்களுக்கு பாதியளவு ஓய்வூதியம் வழங்கப்படுதல் பொருத்தமானதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி பாதியளவு ஓய்வூதியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

182/ '15

4.

கௌரவ டலஸ் அழகப்பெரும்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) 2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் ஒழுங்கு விதிகள் இலக்கம் 1 இன் 4 (2) அத்தியாயத்தின் கீழ் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு 2014.03.21 ஆம் திகதிய 1854/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பயங்கரவாத செயல்களுடன் தொடர்புடையதென பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அமைப்புகளின் எண்ணிக்கை மற்றும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஏற்புடைய அமைப்புகளினதும் ஆட்களினதும் அனைத்துத் தகவல்களும் அடங்கிய விபரமொன்றை சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) LTTE அமைப்பினால் 1976 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட வன்முறைச் செயல்கள் சம்பந்தமாக, இலங்கை பொலிஸ் மேற்படி ஆ (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புகள் மற்றும் ஆட்கள் சம்பந்தமாக புலனாய்வுகளை ஆரம்பித்துள்ளதா என்பதையும்;

(ii) ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையினால் 2001 செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட 1373 ஆம் இலக்க பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்புடைய சந்தேக நபர்களை எமது நாட்டுக்கு பெற்றுத் தரும்படி ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் , ஏன்?

227/ '15

5\.

கௌரவ சுனில் ஹன்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமி பேரழிவினால் சேதத்துக்கு உள்ளாகிய தமது வீட்டுக்குப் பதிலாக கூட்டாட்சி வீடுகளிலிருந்து ஒரு வீட்டைப் பெற்றுக்கொண்ட திரு. டபிள்யூ. பிரதீப்பின் பிள்ளையை 2013 ஆம் ஆண்டில் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்புக்குச் சேர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிராகரிப்புகளின் பின்னர், சம்பந்தப்பட்ட சிறுமியை பாடசாலையில் அனுமதித்துவிட்டு அறிவிக்குமாறு தெரிவித்து அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் பாடசாலை அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எழுத்து மூலமான அறிவித்தல் தொடர்பாக பாடசாலை அதிபரின் பதிற்செயற்பாடுகள் யாதென்பதையும்;

(iii) மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, சிறுமி பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி சிறுமி பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிராகரிப்புத் தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சிறுமிக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

52/ ' 15

6\.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளுக்கு மாணவிகளை அனுமதிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படுகின்ற அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் உயர் தர வகுப்புக்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவிகள் கல்வி கற்பதற்குள்ள பாடப் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடப் பிரிவு தொடர்பாகவும், புதிய உயர் தர மாணவிகளுக்குள்ள வகுப்புக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வகுப்பிலும் இருக்கின்ற மாணவிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) 2015 ஆம் ஆண்டில் உயர் தரம் கற்பதற்காக கொழும்பு விசாகா வித்தியாலயத்திற்கு வேறு வித்தியாலயங்களிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ள மாணவிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மாணவியினதும் பெயர், மாவட்டம், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மற்றும் உயர்தர பரீட்சைக்காக கல்வி கற்கின்ற பாடப் பிரிவு ஆகியன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) விசாகா கல்லூரிக்கு அனுமதி பெறுவதற்காக மேற்படி ஒவ்வொரு மாணவிக்கும் காணப்பட்ட தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ எட்வட் குணசேகர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ரன்ஜித் அலுவிஹாரே மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சிறுவர் புனர்வாழ்வு மையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சஹன சமுதாய அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.4),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

5.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.5),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிப் பீடத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

6.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.6),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

7.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.7),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதியவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) — (ஒதுக்கப்பட்ட பதின்நான்காவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 07).

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் கட்டார் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2012 மே 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தாய்லாந்து இராச்சிய அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜனவரி 03 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தோனேஷியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 ஜூன் 10 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 4),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் எகிப்து அராபியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1996 மாச்சு 11 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 5),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைத் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 நவெம்பர் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 6),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் வியட்நாம் சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2009 ஒற்றோபர் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 7),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் சீன மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1986 மாச்சு 13 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 8),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் மலேசியா அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1982 ஏப்பிரல் 16 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 9),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பாகிஸ்தான் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜனவரி மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 10),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2000 ஜூலை 25 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 11),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 2011 மாச்சு 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 12),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையேயான முதலீட்டு மேம்பாடு மற்றும் இருவயினொத்த பாதுகாப்பிற்கான உடன்படிக்கை, அத்தகைய வெளிநாட்டு அரசினாலும் அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக, 1997 ஜனவரி 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2015.12.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான உடன்படிக்கை தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினது சிபாரிசின் பேரில் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015.06.08 ஆம் திகதிய 1918/2 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 18 ஆம் திகதிய 1915/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்திவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக் காலம் திருத்திப்பட்ட மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 ஒற்றோபர் மாதம் 2 ஆம் திகதிய 1934/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(975, 976 மற்றும் 977 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்கள்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைத் தீர்வை தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2015 செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1933/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 13(1) (ஈ) என்னும் பிரிவுடனும் 16 பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மார்ச்சு மாதம் 25 ஆம் திகதிய 1907/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டதும், 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

---